# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.101/2022

## அ.சா. 17 (LW 26)

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | செல்வி. **சவரியம்மாள்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | சூசை | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **02.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 ,2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது வடமதுரை அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 08.05.2021 அன்று எரியோடு காவல்நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணியிலிருந்த போது நிலைய குற்ற எண். 300/2021 வழக்கில் இறந்து போன பன்னீர்செல்வத்தின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி மதியம் 01.00மணிக்கு காவல் ஆய்வாளரிடம் வேண்டு கோள் கடிதம் பெற்று மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை அலுவல் மருத்துவரிடம் கொடுத்தேன். மேற்படி வேண்டுகோள் கடிதம் ஏற்கனவே அ.த.சா.ஆ.8. ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பிரேத பரிசோதனை முடிந்து பன்னீர்செல்வத்தின் உடலை அவரின் உறவினர்கள் வசம் ஒப்புவித்தேன். 10.06.2021 அன்று இறந்த நபரின் உடல் உள்ளுறுப்புக்களையும், சம்பவ இடத்திலிருந்து எடுக்கப்பட்ட தடயச் சொத்துக்களை ஆய்வு செய்வதற்காக ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை வேடசந்தூர் நீதித்துறை நடுவர் அவர்களிடம் ஒப்படைத்து உத்தரவு பெற்றேன். ஆய்வாளர் வழங்கிய வேண்டுகோள் கடிதம் **அ.த.சா.ஆ.12.** ஆகும். மேற்படி உத்தரவு பெற்ற பின்பு தடயச் சொத்துக்களை மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.03 15:28:19 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.